## சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி

## OS. No. 398 /2023

02.07.2025.

## P.W.2- சித்ரா

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் 5ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் சாட்சி சொல்ல நீதிமன்றத்தில் இருந்து சம்மன் வரவில்லை. வாதி அழைத்ததன் பேரில் வந்தேன் என்றால் சரிதான். வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு படித்து காண்பித்தார்கள். எனக்கு புரியவில்லை. வாதி நகை அடகு கடை வைத்துள்ளார்கள் என்றால் சரிதான். வாதி பிரதிவாதியின் மீது புரோநோட் வழக்கு போட்டுள்ளார். நான் 2 வது சாட்சியாக கையெழுத்து செய்தேன். புரோநோட் எழுதியது விநோத்குமார். பிரதிவாதி மருமகன், மகளை தெரியும். வாதியை எப்படி தெரியும் என்றால் வாதியின் மாமியார் எங்கள் ஊர் காரர் என்பதால் தெரியும்,. பிரதிவாதியின் மகள் வாதியிடம் கடன் பெற்றிருந்தார் என்றால் சரியல்ல. அந்த கடனை திருப்பி செலுத்திவிட்டார் என்றால் சரியல்ல. புரோநோட்டில் தேதி குறிப்பிடாமல் பிரதிவாதி மகளிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதி வாதியிடம் அக்டோபர் மாதம் 2017 ல் ரூ.2 இலட்சம் 5 சதவீதம் கடனாக வாங்கியிருந்தார் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி கடன் பெற்ற சமயத்தில் தான் தாவா புரோநோட் கையெழுத்து மட்டும் வாங்கி வைக்கப்பட்டிருந்தது அதை வாதியை நிரப்பி பொய்யாக வழக்கு தாக்கல் செய்திருக்கிறார் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் புரோநோட்டில் கையெழுத்து எதுவும் இடவில்லை என்றாலும் வாதி கேட்டு கொண்டதால் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதிக்கு செலுத்த வேண்டிய தொகை பிரதிவாதி செலுத்திவிட்டார் என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு திரும்ப கொடுக்க வேண்டிய அசல்

**ஆவணங்களை திரும்ப கொடுக்காமல் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது என்றால் சரியல்ல.**

**ம.வி.இல்லை.**

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2025.07.02 17:13:18 +0530

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.